SALCO
South Asian Legal Clinic of Ontario

# தற்காலிக வதிவிட நுழைவனுமதிகள் (TRV): வருகையாளர்கள், மாணவர்கள் மற்றும் பணியாளர்கள்



**தற்காலிக வதிவிட நுழைவனுமதி (Temporary Resident Visa - TRV) என்றால் என்ன?**

TRV என்பது, கனடாவில் நிரந்தரக் குடியிருப்பாளர் அல்லது குடியுரிமை அந்தஸ்து அற்ற நிலையில், கனடாவிற்குத் தற்காலிகமாக வர விரும்புபவர்களுக்குக், கனேடிய விசா அலுவலகத்தால் வழங்கப்படும் ஒரு ஆவணமாகும். சிலர் அதை “நுழைவு விசா” என்று அழைக்கின்றனர்.

TRV என்பது ஒருமுறை நுழைவுக்கு அல்லது பலமுறை நுழைவுகளுக்கு உரியதாக இருக்கலாம், அத்துடன், சில மாதங்கள் முதல் சில ஆண்டுகள் வரை இது செல்லுபடியானதாக இருக்கலாம்:

- ஒற்றை நுழைவு: நீங்கள் ஒருமுறை மட்டுமே கனடாவுக்குள் நுழைய முடியும், அத்துடன், நீங்கள் கனடாவில் தங்கியிருக்க அனுமதிக்கப்படும் காலம் முடிவதற்குள் நீங்கள் வெளியேற வேண்டும். நீங்கள் கனடாவை விட்டு வெளியேறினால், மறுபடியும் வருவதற்குப் புதிய விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- பன்முறை நுழைவு: உங்கள் விசா செல்லுபடியாகும் காலம் வரைக்கும் நீங்கள் பலமுறை கனடாவை விட்டு வெளியேறவும் நுழையவும் இயலுமாக இருக்கும். ஒவ்வொரு முறையும் நீங்கள் குறுகிய காலத்துக்குத் தங்கியிருக்க முடியும் (பொதுவாக 6 மாதங்கள்)

SALCO
South Asian Legal Clinic of Ontario

உங்கள் TRV இன் செல்லுபடியாகும் காலம் நீங்கள் கனடாவில் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள காலத்திற்குச் சமமாக இருக்காது ( “தங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள  காலம்” என இது அழைக்கப்படுகின்றது). கனடாவிற்குள் நுழைய உங்கள் TRV ஐப் பயன்படுத்தலாம், பின்னர்:

• ஒரு வருகையாளராக - குடிவரவு அதிகாரி பிரத்தியேகமாகக் குறிப்பிடும் (உங்கள் கடவுச்சீட்டில் உள்ள ஒரு முத்திரை போன்றது) காலத்திற்குத் தங்குவதற்கு உங்களுக்கு அங்கீகாரம் உள்ளது. எதுவும் பட்டியலிடப்படவில்லை என்றால், நீங்கள் நுழைந்ததிலிருந்து 6 மாதங்கள் வரைக்கும் தங்கியிருக்கலாம்
• ஒரு மாணவர்/வெளிநாட்டுப் பணியாளராக - உங்கள் படிப்பு அல்லது பணி அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலம் வரைக்கும் நீங்கள் தங்கியிருக்கலாம்

**உதாரணம்:**

உங்களிடம் பன்முறை நுழைவு விசா உள்ளது, அது 10 ஆண்டுகளில் காலாவதியாகும். நீங்கள் கனடாவிற்குள் நுழையும்போது, அதிகாரி உங்களுக்கு 6 மாதங்கள் தங்குவதற்கு அனுமதி அளிக்கிறார். அதாவது 6 மாதங்கள் முடிவதற்குள் நீங்கள் கனடாவை விட்டு வெளியேற வேண்டும், ஆனால் TRV க்கு மீண்டும் விண்ணப்பிக்காமல் மேலும் 6 மாதங்களுக்கு நீங்கள் திரும்பி வரலாம் (இது சில நேரங்களில் "நுழைவு விசா" என்று அழைக்கப்படுகிறது). 10 வருடங்கள் முடிந்தவுடன், புதிய விசாவிற்கு விண்ணப்பிக்கும் வரை உங்களால் திரும்பி வர முடியாது. மேலும், நீங்கள் ஒரே நேரத்தில் 6 மாதங்களுக்கு மேல்

SALCO
South Asian Legal Clinic of Ontario

கனடாவில் தங்க விரும்பினால், 6 மாதங்கள் முடிவதற்குள் நீங்கள் தங்கியிருக்கும் காலத்தை நீட்டிக்க விண்ணப்பிக்க வேண்டும்.

**TRV க்குத் தகுதியுடையவர்கள் யார்?**

**TRV ஒன்றுக்குத் தகுதி பெற நீங்கள் பார்வையாளர், மாணவர் அல்லது பணியாளர் வகுப்பின் கீழ் விண்ணப்பிக்க வேண்டும்.**

**நீங்கள் கண்டிப்பாகப் பின்வருவனவற்றையும் கடைப்பிடிக்க வேண்டும்:**

- நீங்கள் விண்ணப்பிக்கும் வகுப்புக்கான நிபந்தனைகள் அனைத்தையும் பூர்த்தி செய்ய வேண்டும்
- நீங்கள் கனடாவில் தங்கியிருப்பது தற்காலிகமானது என்று குடிவரவு அதிகாரியை நம்பவைக்க வேண்டும் (உங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட காலத்தின் முடிவில் நீங்கள் கனடாவை விட்டு வெளியேறிவிட வேண்டும்) உதாரணமாக, உங்கள் சொந்த நாட்டில் வேலை, வீடு அல்லது குடும்ப உறுப்பினர்கள் போன்ற போதுமான உறவுகள் இருப்பதனால் நீங்கள் திரும்பிச் செல்ல வேண்டும் என்று குடிவரவு அதிகாரியிடம் எடுத்துக் காட்டலாம்.
- நீங்கள் கனடாவில் தங்குவதற்குப் போதுமான நிதி வளங்கள் உங்களிடம் இருப்பதை எடுத்துக் காட்ட வேண்டும் (உதாரணமாக: வருகைக்கான நிதி, பாடசாலைக்குச் செலுத்த வேண்டிய கட்டணம், வீட்டுவசதிக்கான பணம் போன்றவை)

SALCO
South Asian Legal Clinic of Ontario

• நீங்கள் பயணம் செய்வதை அனுமதிக்கும் செல்லுபடியாகும் நிலையிலுள்ள கடவுச்சீட்டு அல்லது உங்கள் நாடு வழங்கிய பிற பயண ஆவணத்தை வைத்திருக்க வேண்டும்.
• கனடாவிற்குள் அனுமதிக்கப்படமுடியாத நிலைமை உங்களுக்கு இல்லை, அதாவது கனடாவினுள் நுழைவதற்கு அல்லது தங்குவதற்கு உங்களுக்குத் தடை இல்லை. உதாரணமாக, நீங்கள் கனடாவின் பாதுகாப்புக்கு அபாயம் ஏற்படுத்துபவராக இருந்தால், குற்றவியல் பதிவுகளை வைத்திருந்தால், கனடாவின் சுகாதாரப் பாதுகாப்பில் அதிகப்படியான கோரிக்கைகளை உருவாக்கக்கூடிய சுகாதார நிலைமைகள் இருந்தால் அல்லது பொதுச் சுகாதாரம் அல்லது பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்தினால், நீங்கள் கனடாவினுள் அனுமதிக்கப்பட முடியாது.

### TRV வைத்திருக்கும் ஒருவராக நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள்

• நீங்கள் தங்கியிருக்க அனுமதிக்கப்படும் காலத்தின் முடிவில் நீங்கள் வெளியேற வேண்டும்
• சட்ட அங்கீகாரம் இல்லாமல் நீங்கள் கனடாவில் வேலை செய்யவோ படிக்கவோ கூடாது

### மருத்துவப் பரிசோதனை (Medical Exam)

உங்கள் உடல்நிலையை மதிப்பிடுவதற்கு நீங்கள் மருத்துவப் பரிசோதனையை முடிக்க வேண்டியிருக்கலாம். நீங்கள் விண்ணப்பிக்கும் அனுமதி வகை, கனடாவில் தங்க விரும்பும் காலம் மற்றும் எந்த நாட்டில் இருந்து விண்ணப்பிக்கிறீர்கள் என்பதன் அடிப்படையில் இது தீர்மானிக்கப்படும்.

### விண்ணப்பிப்பது எப்படி ipsum

• நீங்கள் கனடாவிற்கு வருகையாளராக வருகிறீர்கள் என்றால், தற்காலிக வதிவிட விசாவிற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்
• நீங்கள் ஒரு மாணவராக அல்லது பணியாளராக வருகிறீர்கள் என்றால், படிப்பு அனுமதி அல்லது பணி அனுமதிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். TRV க்கு நீங்கள் தனியாக விண்ணப்பிக்க வேண்டியதில்லை. உங்கள் படிப்பு அல்லது பணி அனுமதியைப் பெற்றுக்கொள்ளும்போது அதிகாரி TRV ஐ வழங்குகிறார்
• நீங்கள் கனடாவில் படிப்பு அல்லது பணி அனுமதியில் இருந்தால், உங்கள் TRV காலாவதியாகிவிட்டால்/காலாவதியாகப் போகிறது என்றால், கனடாவிற்குள் இருந்துகொண்டு TRV க்கு விண்ணப்பிக்கலாம். உங்கள் இணையத்தள IRCC கணக்கிற்குச் சென்று தற்காலிக வதிவிட விசா விண்ணப்பத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்
• நீங்கள் படிப்பு அல்லது பணி அனுமதியில் இருந்தால், நீங்கள் கனடாவிற்கு வெளியே இருந்தபோது உங்கள் TRV காலாவதியாகிவிட்டால் (உதாரணமாக. உங்கள் குடும்பத்தைப் பார்க்கத் தாய்நாட்டிற்குச் சென்றிருந்தபோது), கனடாவுக்கு வெளியில் இருந்து வீட்டிற்கு வருவதற்குரிய வருகையாளர் விசாவிற்கு விண்ணப்பிப்பதற்கான செயல்முறையை நீங்கள் பின்பற்ற வேண்டும்

இந்த விண்ணப்பம் இணையத்தளத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும், ஆனால் சில விதிவிலக்குகளுக்கு அமையக் காகித விண்ணப்பத்தையும் நீங்கள் செய்யக்கூடியதாக உள்ளது.

நீங்கள் IRCC இணையத்தளத்தில் இருந்து படிவங்களைப் பெற வேண்டும். உங்கள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிப்பதற்குச் சரியான படிவங்கள் மற்றும் ஆவணங்களை வழங்கியுள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்தச் சரிபார்ப்புப் பட்டியல் ஒன்றும் அதில் உள்ளது.

## விண்ணப்பக் கட்டணம் (Application Fees)

- தனிநபருக்கு $100 –- பன்முறை அல்லது ஒற்றை நுழைவு
- ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்களைக் கொண்ட குடும்பங்களுக்குரிய அதிகபட்சக் கட்டணம் $500 – ஒற்றை அல்லது பன்முறை நுழைவு

குறிப்பு: நீங்கள் பணி அல்லது படிப்பு அனுமதியில் கனடாவிற்கு வரும் ஒரு மாணவர் அல்லது பணியாளராக இருந்தால், உங்கள் TRV க்குக் கூடுதலான கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

## நீங்கள் கனடாவில் தங்கியிருக்கும் காலத்தை நீட்டித்தல்

- நீங்கள் அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு அப்பால் கனடாவில் தங்கினால், உங்களுக்கு அந்தஸ்து இருக்காது.
- நீங்கள் ஒரு வருகையாளராக இருந்து, 6 மாதங்கள் அல்லது வேறொரு குறிப்பிட்ட  காலத்துக்குத் தங்க அனுமதிக்கப்பட்டிருந்தால் (IRCC வேறு ஏதாவது சொல்லியிருந்தால்), உங்கள் விசாவை நீட்டிக்க வேண்டும். வருகையாளர்கள் தங்கள் வருகையாளர் பதிவை நீட்டிக்க விண்ணப்பிப்பதன் மூலம் காலம் முடிவடைவதற்கு முன்னராகக் கனடாவில் தங்குவதற்கான அங்கீகாரத்தை நீட்டிக்க முடியும்.

• நீங்கள் ஒரு மாணவர் அல்லது பணியாளராக இருந்தால், உங்கள் படிப்பு அல்லது பணி அனுமதி நீட்டிப்புக்கு விண்ணப்பிப்பதன் மூலம் நீங்கள் தங்கியிருக்கும் காலத்தை நீட்டிக்கலாம்.

**மறுசீரமைப்பு (Restoration):** நீங்கள் சரியான நேரத்தில் தங்கியிருக்கும் காலத்தை நீட்டிக்கவில்லை என்றாலும் கூட, இழந்த அந்தஸ்தை நீங்கள் மீண்டும் பெறலாம். கனடாவில் தங்குவதற்கான உங்கள் அங்கீகாரத்தை இழந்த 90 நாட்களுக்குள் அதனை மீட்டெடுப்பதற்குக் கனடாவிற்குள் இருந்தவாறு நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

## கனடாவிற்குள் இருந்தவாறு TRVகளைப் பெற்றுக்கொள்ளுதல்

பொதுவாக நீங்கள் உங்கள் சொந்த நாட்டிலிருந்து கனடாவிற்குச் செல்லவோ, படிக்கவோ அல்லது வேலை செய்யவோ விண்ணப்பிக்க வேண்டும், பின்னர் நீங்கள் இங்கு இருக்கும்போது தங்கியிருக்கும் காலத்தை நீட்டிக்க விண்ணப்பிக்கலாம். சில சந்தர்ப்பங்களில், குடிவரவுச் சட்டங்கள் உங்களைக் கனடாவில் தற்காலிகமாகத் தங்குவதற்கும், கனடாவில் வேலை செய்வதற்கும் படிப்பதற்கும் அனுமதிக்கின்றன. உதாரணத்திற்கு:

• அகதிக் கோரிக்கையாளர்கள் தங்கள் விண்ணப்பத்தின் மீதான முடிவுக்காகக் காத்திருக்கும்போது வேலை அல்லது படிப்பு அனுமதியைப் பெறலாம்
• வன்முறைச் சூழலை விட்டு வெளியேறுபவர்கள் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய தற்காலிக வதிவிட அனுமதிக்கு (TRP) )

விண்ணப்பிக்கலாம்

• மனிதாபிமானம் மற்றும் கருணை அடிப்படையில் நிரந்தர வதிவிடத்திற்கான விண்ணப்பத்தின் முதலாவது கட்டத்தைத் தாண்டிய விண்ணப்பதாரர்கள் ("கோட்பாட்டின் ஒப்புதல்" என அழைக்கப்படுகிறது) பணி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கலாம்.